# கொழும்பிலும் இராணுவத்துக்கு அழைப்பு!

பக்கங்கள் 4 விலை சதம் 40 ★

# ஈழநாடு
The EELA NADU

மலர் 19 ஆவணி 4 றம்ழான் 4 இதழ் 190
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 20 8-77




கொழும்பு, வெள்ளி

கொழும்பு புறக்கோட்டையிலுள்ள இரண்டு சைவ ஹோட்டல்கள் கொள்ளையடிக்கப்பட்டதுடன் வெள்ளவத்தையிலும் ஒரு கடை கொள்ளையடிக்கப்பட்டுச் சேதப்படுத்தப்பட்டதாகவும் இதனைத் தொடர்ந்து நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக இராணுவம் சேவைக்கு அழைக்கப்பட்டதாகவும் அறியப்படுகின்றது.

கொழும்பு நகரில் பல பகுதிகளிலும் ஆயுதம் தாங்கிய பொலிசார் ரோந்துக் காவலில் ஈடுபட்டுள்ளனர். வீதிகளில் கூட்டம் கூட்டமாக நிற்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பதுளை, கண்டி ரயில் சேவைகள் நேற்றிரவு ரத்துச்செய்யப்பட்டன.

சனிக்கிழமை காலை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு 'யாழ்தேவி' கடுகதி ரயில் செல்லும். மட்டக்களப்பு 'உதயதேவி' சேவையும் இருக்கும்.

**எம். பி.க்களுக்கு ஹெலிகொப்டர்**

தேசிய அரசப்பேரவையின் இன்றைய கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில், ''யாழ்ப்பாணத்திலிருந்து எம்.பி.க்கள் பேரவைக்கு வந்து இந்த விவாதத்தில் கலந்து கொள்வதற்கு போக்குவரத்து வசதி இல்லை''யென்று தெரி

(4ம் பக்கம் பார்க்க)

# டி.ஐ.ஜி. ராஜசிங்கம் யாழ் மாவட்ட இணைப்பதிகாரி!

## பொறுப்பதிகாரியாக பொலிஸ் அதிபர் 'சுந்தர்' நியமனம்

யாழ்ப்பாணம், சனி

**யாழ்ப்பாண மாவட்டத்திற்கு இணைப்பு அதிகாரியாகப் பிரதிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. உருத்திரா ராஜசிங்கம் நியமிக்கப்பட்டிருக்கிறார். திரு. ராஜசிங்கம் நேற்றுத் தமது பதவியை ஏற்றுக் கொண்டார். இவருக்கு உதவியாகக் குற்றத் தடுப்புப் பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் நியமிக்கப்பெற்றிருக்கிறார்.**

யாழ்ப்பாண மாவட்டத்தில் சீரான நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்கு இணைப்பு அதிகாரி நடவடிக்கைகளை மேற்கொள்வார். இன்று காலை யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள இராணுவ, கடற்படைப் பொறுப்பதிகாரிகளை இணைப்பதிகாரி சந்தித்து ஆலோசனை நடத்துவார்.

உதவியாளராக நியமிக்கப்பட்டுள்ள திரு. ஆர். சுந்தரலிங்கம், திரு. வி. தர்மராசா, திரு. பபராண்டே ஆகியோருடனும் மற்றும் அதிகாரிகளுடனும் திரு. ராஜசிங்கம் நேற்று மாலை ஆலோசனை நடத்தினர்.

தமிழ்ப் பகுதிப் பொலிஸ் நிலையங்களுக்குத் தமிழ்ப் பொலிஸார் அனுப்பப்படவிருப்பதாகத் தெரிகிறது

இணைப்பு அதிகாரியும், பொலிஸ் பொறுப்பு அதிகாரியும் நியமிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் வழமையான நிலை திரும்புமென்றும், இன்றே கடைகள் யாவும் திறக்கப்படுமென்றும், திங்கட்கிழமை அரசாங்க அலுவலகங்களும் மற்றும் அலுவலகங்களும் செயல்படத் தொடங்குமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. வங்கிகளும் திங்கள் முதல் செயல்படுமென நம்பப்படுகிறது. பஸ் போக்குவரத்துச் சேவைகளும் விரைவில் சீராகலாமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## ஏழு மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டம்!

(கொழும்பு)

ஊரடங்குச்சட்டம் நேற்று மேலும் இரண்டு மாவட்டங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டது. ஏற்கனவே அநுராதபுரம், பொலன்நறுவ, குருநாகலை, மாத்தளை ஆகிய இடங்களில் (மாலை 4 மணிமுதல் காலை 5 மணிவரை) அமுலுக்கு கொண்டுவரப்பட்ட ஊரடங்குச் சட்டம்; நேற்றுப் பகல் கண்டியில் (காலை பதினொரு மணி முதல் அடுத்த நாட் காலை ஐந்து மணிவரை) 18 மணி நேரமும் மாலையிலிருந்து காலையிலும் (மாலை 5 மணிமுதல் காலை 6 மணிவரை) அமுல் செய்யப்பட்டது.

பாணந்துறையில் ஏற்கனவே அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட (இரவு எட்டு மணி முதல் மாலை ஐந்து மணி வரை) ஊரடங்குச் சட்டமும் நீடித்துவருகிறது.

## கடற்படையினர் லீவு ரத்து!

கடற்படைத் தளபதி இன்று விடுத்துள்ள அறிக்கையொன்றில்; கடற்படையினரின் சகல லீவுகளும் ரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

''கடற்படையினரின் சகல லீவுகளும் ரத்துச்செய்யப்பட்டுள்ளன. லீவில் இருப்பவர்கள், உடனடியாக அண்மையிலுள்ள கடற்படை அலுவலகத்துடன் தொடர்புகொள்ள வேண்டும். கடற்படைத் தொண்டர்களும் இத்த அலுவலகங்களுடன் உடனடியாகத் தொடர்பு கொள்க'' என்று கடற்படைத் தளபதி தனது அறிக்கையில் கேட்டுள்ளார்.

## 'தமிழர்களை பாதுகாருங்கள்' பிரதமர் கோரிக்கை

(கொழும்பு)

''குற்றச் செயல்களைச் சிந்தனையாகக் கொண்ட தீய சக்திகளினால், இந்தநாட்டின் அப்பாவித் தமிழ் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். யாழ் குடாநாட்டினைத் தவிர்ந்த பல்வேறு பகுதிகளிலும் தலைதூக்கிய கொலை, கொள்ளை, தீயிடல் வன்முறைச் சம்பவங்களினால் பெரிதும் பாதிக்கப்பட்ட தமிழ மக்களைப் பாதுகாக்க வேண்டியது எனது கடமையாகும். இந்தப்பேரவையின் சகல உறுப்பினர்

(4ம் பக்கம் பார்க்க)

## யாழ். நகர் வழமைக்கு திரும்புகிறது!

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாண நகரத்தில் 3 தினங்களின் பின்னர் அமைதி நிலவியது மக்கள் தங்கள் வழக்கமான வேலைகளைச் செய்ய ஆரம்பித்துள்ளனர். அதே சமயம், கவச மோட்டார்கள் நகர வீதிகளில் ரோந்து சுற்றிக்கொண்டிருக்கின்றன.

நேற்றுக்காலை பெரியகடைப் பகுதிகளில் சில கடைகள் திறந்து வியாபாரம் நடைபெற்றன. தேநீர்க் கடைகள், சாப்பாட்டுக் கடைகள் ஒற்றைக் கதவில் திறக்கப்பட்டிருந்தன.

தீயினால் எரிந்து சாம்பரான பழைய மார்க்கட் பகுதியைத் துப்புரவு செய்யும் வேலையில் மாதசபை ஊழியர்களை ஈடுபட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி வாசல்கள் பூட்டப்பட்டிருந்தன நோயாளிகள் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர். அரசாங்கத் திணைக்களங்கள், வங்கிகளில் வேலைகள் நடைபெறவில்லை. ஊழியர்கள் மிகக் குறைவாகவே வந்திருந்தனர்.

வாழைப்பழக் கடைகள் மூற்றாக எரிந்து சாம்பலாகிவிட்டதால், வேறு இடங்களில் வாழைப்பழக்கடைகள் தற்காலிகமாகப் போடப்பட்டிருந்தன. மரக்கறிகடையிலும் நேற்று வியாபாரம் நடை

[3 ம் பக்கம் பார்க்க]

கலவரத்தினால் பாதிக்கப்பட்டு வெளிமாகாணங்களில் ஆங்காங்கே ஆலயங்களிலும்

(3-ம் பக்கம் பார்க்க)

## அநுரதபுரியிலிருந்து அகதிகள் வந்தனர்

யாழ்ப்பாணம், சனி

அநுராதபுரம், மதவாச்சி, வவுனியா, மற்றும் பல இடங்களிலிருந்து பஸ்களில் வந்த பாதிக்கப்பட்ட மக்கள் நேற்றுக்காலை யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலயத்திலுள்ள பாதிக்கப்பட்டோர் முகாமை வந்தடைந்தனர்.

நேற்றுக்காலை பஸ்களில் சுமார் 800 பேர் வந்தடைந்தனர். நண்பகல் பஸ்களில் சுமார் 1200 பேர் வந்தடைந்தனர். இவர்களுக்கு சமூக சேவைப் பகுதியினரும், யாழ். இ. போ. ச. நலன்புரிச் சங்கத்தினரும், தேவையான உதவிகளை அளித்தனர். யாழ். ரோட்டரி கழகமும் யாழ் லயன்ஸ் கழகமும் உதவிகளைச் செய்தனர் யாழ்ப்பாணத்திலுள்ள வர்த்தகர்களும், தனிப்பட்டவர்களும் மாமூடைகள், அரிசி மூடைகள், மரக்கறி தேங்காய் வழங்கினார்கள்.

(3-ம்பக்கம் பார்க்க)

# "ஒழுங்கை நிலைநாட்டி தமிழருக்கு நீதி வழங்கவும்"

## பிரதமருக்கு ஐ. தே. க. அமைப்பாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், சனி

'யாழ்.நகரில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கலவரத்தை தடுத்து, அமைதியை ஏற்படுத்த, சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுங்கள், தமிழ் மக்களின் உயிர் அநியாயமாக பறிக்கப்படுகிறது. தமிழ்மக்களின் வர்த்தக நிலையங்கள், வீடுகள் எரிக்கப்படுகின்றன; சூறையாடப்படுகின்றன; தமிழ் வாலிபர்கள் கண்டபடி தாக்கப்படுகிறார்கள். இனத்துவேஷ ரீதியில் இன்று குடா நாட்டில் தமிழ்மக்கள் தாக்கப்படுகிறார்கள். இவற்றிற்கு எல்லாம் யார் காரணம் என்பதை அரசு விசாரித்துக் கண்டுபிடித்துக் கடும்தண்டனை விதிக்க வேண்டும். தமிழ்பேசும் மக்களுக்கு தாமதமின்றிப் போதிய பாதுகாப்புதரப்படவேண்டும்'

மேற்கண்டவாறு பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவை மானிப்பாய்த் தொகுதி ஐ. தே. க. அமைப்பாளர் திரு. எஸ். அலோஷியஸ் கேட்டுள்ளார்.

கடந்த அரசாங்க காலத்தில் ஆத்திரமூட்டும் இவ்வித நடவடிக்கைகள் வடபகுதியில் இடம்பெற்றபோதிலும் எவ்வித விசாரணைகளும் மேற்கொள்ளப்படவுமில்லை; நீதி நிலைநாட்டப்படவுமில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ள திரு. அலோஷியஸ், ஐ. தே. க. ஆட்சியிலும் முன்னையநிலை தொடராதவகையில்பார்த்துக் கொள்ள வேண்டுமென்றும் பிரதமரை வேண்டிக்கொண்டுள்ளார்.

மானிப்பாய்த் தொகுதியில் சுன்னாகத்தில் நடைபெற்ற அசம்பாவிதங்கள் குறித்தும் தகுந்த நடவடிக்கை எடுக்கும்படியும் பிரதமர் ஜே. ஆர். ஜயவர்த்தனவை திரு.அலோஷியஸ் கேட்டுள்ளார்.

'யாழ்.நகரை அடுத்து சுன்னாகத்திலும் தமிழ் மக்கள் இரவோடு இரவாகத் தாக்கப்பட்டதாகவும் தமிழ் மக்களுடைய கடைகளுக்கும் வேலிகளுக்கும் தீயிடப்பட்டதாகவும் கடையில்உள்ள பொருட்கள் சூறையாடப்பட்டதாகவும், இதனால் இப்பகுதியிலிருக்கும் தமிழ்மக்கள் பாதுகாப்பற்ற முறையில் அச்சத்தோடு வாழுவதாகவும், இவர்களுடைய அச்சத்தைப் போக்கும்முறையில் தகுந்த விசாரணைநடத்தி குற்றவாளிகள் யாராயிருப்பினும்தண்டிக்கும்படியும், பாதிக்கப்பப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு கொடுக்கும்படியும், சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டி தமிழ்மக்களுக்குநீதியை நிலைநாட்டும்படியும், பிரதமர், பொலிஸ்மா அதிபர், பிரதி பாதுகாப்பு அமைச்சர் ஆகியோரைவேண்டுகிறேன்' என்று திரு. அலோசியஸ் அவசரத் தந்திமூலம் கேட்டுள்ளார்.

பயங்கர ஆயுதங்கள் துணை கொண்டு அப்பாவித் தமிழர்களைத் துன்புறுத்துவது, எதுவித காரணமுமில்லாமல் அவர்களைத் தாக்குவது உடனடியாகத் தவிர்க்கப்படவேண்டும். தமிழ்மக்கள் இலங்கையின் எப்பாகத்தில் இருப்பினும் அவர்களுக்குத் தகுந்த பாதுகாப்புக் கொடுத்து அவர்களை அச்சமின்றி வாழவைப்பது ஒரு ஜனநாயக அரசாங்கத்தின் கடமை என்றும் அவர் தமது தந்தியில் குறிப்பிட்டுள்ளார். (அ)

## பாதிக்கப்பட்ட தமிழரை யாழ். கொண்டுவர ஏற்பாடு

யாழ்ப்பாணம், சனி

"அநுராதபுரத்திற்கு அப்பால் பாதுகாக்கப்பட்டு, தற்போது அநுராதபுரத்தில் பாதுகாப்புடன் இருக்கும் மக்களை, யாழ்ப்பாணத்திற்கு பாதுகாப்புடன் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படுகிறது"

வடமாகாண இணைப்பு அதிகாரியும் பிரதி பொலிஸ் மாஅதிபர் திரு. ருத்திரராஜலிங்கம், சாவகச்சேரி எம்.பியிடம் மேற்கண்ட உறுதியை அளித்தார்.

### நவம் கோரிக்கை

யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் நேற்றுப்பிற்பகல், சாவகச்சேரி எம். பி திரு.வி.என்.நவரத்தினம் யாழ் மாவட்ட இணைப்பு அதிகாரியைச் சந்தித்து, அனுராதபுரத்தில் உள்ள பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை யாழ்ப்பாணத்திற்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்குமாறு கோரினார்.

அநுராதபுரம் கச்சேரியிலும் பொலிஸ் நிலையத்திலும், இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் பாதுகாப்புடன் இருக்கின்றார்கள். அநுராதபுரம் டிப்போவை சேர்ந்த இ.போ.ச. சாரதிகள் இவர்களை யாழ்ப்பாணம் கொண்டுவர தயங்கியதைத் தொடர்ந்து யாழ். டிப்போவைச் சேர்ந்த பஸ்கள் அங்கு சென்று இவர்களை இங்கு கொண்டுவந்துள்ளது. அநுராதபுரம் ஆஸ்பத்திரியிலுப, காயமடைந்த பலர் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அநுராதபுரம் பகுதியில், பலியானவர்களின் சடலத்தை இங்கு கொண்டுவரவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மற்றும் மாவட்டங்களிலும், பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள்

[3-ம் பக்கம் பார்க்க]

## பிரதமர் பதவியைக்கூட ஏற்கமறுத்த கர்மவீரர்

### காமராஜர் பற்றி இந்திய ஜனாதிபதி

சென்னை, ஆகஸ்ட் 19

காலஞ்சென்ற கர்மவீரர் காமராஜரை நாம் கௌரவிக்க வேண்டுமானால் எமது பொது வாழ்வில் அவரைப்போன்று தூய்மையாக நடந்துகொள்ள வேண்டும்.

இவ்வாறு இந்திய ஜனாதிபதி திரு. நீலன் சஞ்சீவரெட்டி சென்னையில் கூறினார்.

தமிழ்நாடு சட்டசபையில் காமராஜரின் உருவப்படத்தை திறந்துவைத்துப் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதியாகப் பதவி ஏற்ற பின்னர் தாம் கலந்துகொள்ளும் முதல் நிகழ்ச்சியும் சிறப்பு நிகழ்ச்சியும் இதுதான் என்றும் தெரிவித்த ஜனாதிபதி திரு. ரெட்டி மேலும் கூறியதாவது;-

50 ஆண்டு காலமாக இந்தியாவுக்காக தம்மை அர்ப்பணித்து வாழ்ந்துவந்த காமராஜர் எளிமையுடனும் நேர்மையுடனும் வாழ்ந்துவந்தார். ஒருதடவை இந்தியப் பிரதமராகப் பதவிஏற்குமாறு கேட்டபோதுகூட தன்னடக்கத்துடன் காமராஜர் மறுத்துவிட்டார்.

தமிழ்நாடு சட்டசபை சபாநாயகர் திரு. முனு ஆதி பேசுகையில் திரு. காமராஜர் எளிமை, நேர்மை என்ற இலக்கணங்களுக்கு இலக்கிமாகத் திகழ்ந்தார் என்று கூறினார்.

### காந்தியின் உருவச்சிலை

சென்னை ராஜ்பவனில் மகாத்மாகாந்தியின் உருவச்சிலை ஒன்றையும் ஜனாதிபதி திறந்து வைத்தார். (இ)

## இரு தொகுதிகளில் பூட்டோ போட்டி

இஸ்லாமாபாத், ஆக. 19

பாகிஸ்தானில் அடுத்த அக்டோபர் மாதம் நடைபெற உள்ள பொதுத் தேர்தலில் முன்னாள் பிரதமர் ஜனாப் சுல்பிகார் அலிபூட்டோ இரண்டு தொகுதிகளில் போட்டியிடுவார்.

இத்தகவலை அவரே நேற்று பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

இதேவேளையில் ஜனாப் பூட்டோவின் மக்கள் கட்சியிலிருந்து அநேக முக்கிய தலைவர்கள் ராஜினாமாச் செய்துள்ளனர். (இ)

## "விவசாயவளர்ச்சிக்கு புதிய முறைகளைக் கையாள வேண்டும்"

### — விவசாய உதவிப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், சனி

"விவசாய வளர்ச்சிக்கு ஆராய்ச்சிமூலம் நாம் புதிய முறைகளைக் கையாள வேண்டும். இதற்காகவே இது போன்ற பாடசாலைகளை அமைத்து விவசாயக் கல்வியைப் போதிக்கின்றோம்"

இவ்வாறு திருநெல்வேலி மகளிர் விவசாயப் பாடசாலையில் நடைபெற்ற சாதனைதின விழாவில் கலந்து கொண்ட விவசாய உதவிப் பணிப்பாளர் திரு. எஸ். நடேசன் பேசுகையில் கூறினார்.

இவ்விழா மாவட்ட விவசாய கல்வி உத்தியோகத்தர் திரு. நா. சிவமுத்துலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

திரு. எஸ். நடேசன் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"விவசாயக்கல்வி மூலம் கற்றுக்கொண்டபுதிய முறைகளை நாம் விவசாயிகளுக்கு உதவும் வகையில் உபயோகப்படுத்த வேண்டும். நாம் குறிப்பிட்ட இடங்களிலே மட்டும் விவசாய உற்பத்திகளைச் செய்யாமல் நீர் வசதியுள்ள சகல இடங்களுக்கும் சென்று புதிய முறைகளின் மூலம் விவசாய விஸ்தரிப்பை ஏற்படுத்த வேண்டும்.

விவசாயத்துடன் மட்டும் நின்றுவிடாமல் வீடுகளிலே மிருக வளர்ப்பையும், கைத்தொழில்களையும் செய்து பயன் பெற வேண்டும். இதற்காகவே இந்த பாடசாலையில் மிருக வளர்ப்பு. கைத்தொழில் என்பனவும் போதிக்கப்பட்டு வருகின்றது".

திரு. ரி. என். மாணிக்கவாசகரும் பேசினார். (கு.அ)

## பொன்னாலை வரதராசப் பெருமான் கொடி

சுழிபுரம், வெள்ளி

பொன்னாலை ஸ்ரீ வரதராசப் பெருமான் கோயில் வருடாந்த உற்சவம் சனிக்கிழமை காலை 8-30 மணியளவில் கொடியேற்றும் வைபவத்துடன் ஆரம்பமாகும். தினமும் பகல் திருவிழா 11 மணிக்கு முன்பதாகவும் இராத்திருவிழா 9 மணி வரையும் நடைபெறும். புரட்டாதி மாதம் ஐந்தாம் திகதி தேர்த்திருவிழாவும் அடுத்த தினம் 6ம் திகதி சுழிபுரம் திருவடிநிலை தீர்த்தக்கரையில் தீர்த்தவைபமும் நடைபெறும்.


## நினைவாஞ்சலி



தோற்றம் 30-5-1914
மறைவு 30-8-1976

சூரியப்பிரகாஸ் என்னும் சொல்லொலிக்கச் சுடர்விட்டுப் பிரகாசித்த சன்லையிற் சாயி றைக்கிளினேர்ஸ் அதிபர்

ஆர். செல்லையா அவர்கள் அமரத்துவம் அடையப்பெற்ற

ஓராண்டு நினைவு 20-8-77

"வாழ்க்கையின் சோதனை" என்னும் நூலினை வகுத்துப் பல்லாண்டு நினைவொளிரும் அன்பார்ந்த தந்தை

ஆர் செல்லையா

அவர்களை நினைவு கூரும்

மனைவி - மக்கள்.

6860

## வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## விளம்பரம்

சில்லறைப் பண்டகசாலை முகாமையாளர்கள், பெற்றோல் நிரப்பு நிலைய முகாமையாளர்

## பதவி வெற்றிடம்

(தற்காலிகம்)

1. பதவி: III ம் தர கிளை முகாமையாளர், பெற்றோல் நிரப்பு நிலைய முகாமையாளர்.
2. கல்வித்தகைமை: 6 பாடங்களில் வெற்றுள்ள க. பொ. த. (சாதாரண) பரீட்சை சித்தியும், ஒரு வருட கால அனுபவமும்.
3. வயதெல்லை: 23—50 (தற்போது கூட்டுறவு ஊழியராக இருப்போருக்கு இந்த நியதி வேண்டியதில்லை.) 180 — 320/-
4. வேதனம்: ..................... 8×10, 10×6
5. வசிப்பிடத் தகைமை: குறைந்த பட்சம் இரு வருடங்களாவது யாழ். மாவட்டத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும்.
6. பிணைப்பணம்: ரூபா 900/- பதவி கிடைத்தவுடன் பிணைப்பணமாகக் கட்டப்பட வேண்டும். இதற்கு மேலதிகமாக ஆதனப்பிணை உறுதி மூலமோ நம்பிக்கையான பிணை உறுதிப் பத்திர மூலமோ மேலதிகப் பிணை கட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டால் சங்கத்தினால் கேட்கப்படும் இடத்து அதை நிறைவேற்றுவதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.
7. விபரங்கள்: கல்விச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ் பிரதிகளும் வசிப்பிடத்தகைமை பிறப்புச் சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்படாவிடில் அந்த விளக்கம் குறித்து அத்தாட்சிப்படுத்தும் கடித மூலம் நற்சான்றிதழ் பிரதிகள் இரண்டும் குறிப்பிட்டபடி நிரப்பப்பட்ட விண்ணப்பபத்திரத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும். (இந்தச் சான்றிதழ்களின் உண்மைப்பிரதிகள் கோரப்படுமிடத்து நேர்முகப்பரீட்சையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் )
8. விண்ணப்பம் ஏற்கப்படும் கடைசித் திகதி: 29-8-77.

மேற்குறிப்பிட்ட கடிதங்கள் யாவும் பதிவுத்தபாலில் "பொதுமுகாமையாளர், வேலணை பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம்" என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மூலையில் கிளை முகாமையாளர் / பெற்றோல் நிரப்பு நிலைய முகாமையாளர் பதவியின் பொருட்டு விண்ணப்பம் என்று குறிப்பிட்டு 29-8-77-ந் திகதிக்கு முன்பாக அனுப்பப்படல் வேண்டும்

பொதுமுகாமையாளர்.

குறிப்பு:-
1. பெற்றோல் நிரப்பு நிலைய முகாமையாளராகத் தெரிவு செய்யப்படுபவர் உடனடியாக வேலையில் அமர்த்தப்படுவர்
2. சங்க எல்லைப் பரப்பில் வசிப்போருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

6876

# 'சேதமடைந்த கடையருகில் துப்பாக்கி ஒன்றைக் கண்டெடுத்தேன்"

## சப்இன்ஸ்பெக்டர் மெண்டிஸ் சாட்சியம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பலியான மூவரின் மரண விசாரணையில் சாட்சியமளித்த பொலிஸ்சப் இன்ஸ் பெக்டர் ரி.ஐ. மெண்டிஸ் மேற்கண்டவாறுகூறினர்.

யாழ். நீதிமன்றத்தில் நீதவான் திரு.கே.வி. நவரத்தினம் முன்னிலையில் நேற்றுவிசாரணை நடைபெற்றது.

இறந்தவர்கள் நலன் கருதிச் சட்டத்தரணிகள் எஸ். நடராசா, ஜிம்மி இராஜரத்தினம் ஆர். விஸ்வநாதன், எஸ். லோகேஸ்வரன், த. சோமசுந்தரம், கே. சற்குணநாதன் ஆகியோர் ஆஜராஞர்கள்.

பொலிசார் தரப்பில் உதவிப் பொலிஸ்அதிபர் திரு.எம். எம். சில்வா யாழ்ப்பாணம் தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் கொட்.பிறே குணசேகராவின் உதவியுடன் கலந்துகொண்டார்.

சப்இன்ஸ்பெக்டர் மெண்டிஸ் சாட்சியளிக்கையில் மேலும் கூறியதாவது:

நான் யாழ்ப்பாணம்பொலிஸில் 77 மே மாதம் முதல் கடமையாற்றினேன். யாழ்ப்பாண நகரில் கூட்டமிருப்பதாக அறிவிக்கப்பட்டது. பொலிசார் அங்கு அழைக்கப்பட்டனர். நான் பொலிஸ் கான்ஸ்டபிள்களுடன் அங்கு சென்றேன். கான்ஸ்டபிள்கள் றைபிள், துப்பாக்கியுடன் வந்தார்கள்.

நான்நாகவிகாரைச்சந்திக்குச் சென்றேன். ஆஸ்பத்திரிவீதியால் பலாலி வீதிக்குச் சென்று அங்கு சென்றேன்.

### தியேட்டர் பக்கம் சத்தம் கேட்டது

வெலிங்டன் தியேட்டர் சந்தியில் புகை மண்டலத்தைக் கண்டேன். நாகவிகாரைச் சந்தியில் கூட்டத்தைக் காணவில்லை. வெலிங்டன் தியேட்டர் சந்திப்பக்கம் சத்தம் கேட்டது.

புகையிரதக்கடவையடிக்கு வந்ததும் சந்திக்கு அப்பால் ஒரு கடையை உடைப்பதைக் கண்டேன். கூட்டத்தினர் கடையிலிருந்த சாமான்களை எடுத்துக்கொண்டிருந்தனர் வீதியில் நெருப்பு எரிந்து கொண்டிருந்தது. அக்கடையிலிருந்த சாமான்களை எடுத்து அக்கூட்டத்தினர் தீயில் போடுவதைக் கண்டேன். அக்கூட்டத்தில் 500 பேர் வரை இருந்தார்கள். அவர்கள் கையில் போல்லைப் போன்ற ஆயுதங்கள் இருப்பதைப் பார்த்தேன்.

### கற்கள், போத்தல்கள் எறிந்தனர்

நான் பத்து யார் முன்னல் வந்தேன். கூட்டத்தினர் 80 யார் தூரத்தில் நின்றனர். எங்களை நோக்கி கற்களையும், போத்தல்களையும் எறிந்தனர். நான் அவ்விடத்தில் நின்றேன் கற்களையும் போத்தல்களையும் தொடர்ந்து எறிந்தார்கள். நான் எச்சரிக்கை செய்தேன், இரண்டு நிமிடத்துக்குப் பின்னர் மீண்டும் எச்சரிக்கைசெய்தேன். இரண்டாவது எச்சரிக்கையையும் மீறி எறிந்தார்கள்சிறிது தூரத்தில் பெரிய சத்தமொன்றுகேட்டது. துப்பாக்கிகளை தயார் செய்யுமாறு ஆங்கிலத்தில் கூறினேன்.

### சுட்டபின்பும் கலையவில்லை

ஒரு தடவை சுடுமாறு கூறினேன். சுட்டபின்புங்கூட்டத்தினர் கலைந்து செல்லவில்லை. தொடர்ந்து கற்களையும், போத்தல்களையும் வீசிக்கொண்டிருந்தனர். தொடர்ந்து அந்தக் கடைக்குச் சேதம் விளைவித்துக் கொண்டிருந்தனர். அதன்பின் எங்கள் முன்னல் இரண்டு மூன்று சத்தங்கள் கேட்டன. அந்தக் கூட்டத்திலிருந்தே சத்தம் வந்தது. அதன் புகையிலிருந்து அது கைக்குண்டாக இருக்கலாம் என நினைத்தேன். கான்ஸ்டபிள்களை துப்பாக்கிகளை ஆயத்தம் செய்யுமாறு கட்டளையிட்டேன் ஒரு தடவை சுடுமாறு கட்டளையிட்டேன். சுட்டதும் கூட்டத்தினர் கலைந்து ஓடுவதைக் கண்டேன். ஒருவர் விழுவதைக் கண்டேன். சிலர் அவரைத் தூக்கிச் சென்றனர்.

### துப்பாக்கியை கண்டெடுத்தேன்

உடைக்கப்பட்ட கடைக்கு முன்னல் போனேன். கடை அருகில் ஒரு துப்பாக்கியைக் கண்டெடுத்தேன்.

அக்கடையில்சாமான்கள் எல்லாம் நாசமாக்கப்பட்டிருந்தது. வீதியில் பொருட்கள் தொடர்ந்து எரிந்துகொண்டிருந்தன. அதன்பின் பஸ் நிலையப்பக்கம் வந்தோம். (கா)

எதிரே நிற்கும் கூட்டத்தை நோக்கி ஒரு தடவை சுடுமாறு நான் உத்தரவிட்டேன். சுடப்பட்டதும், கூட்டத்தினர் கலைந்து சென்றனர். ஒருவர் விழுவதைக் கண்டேன். நான்கிட்ட போய்ப்பார்த்தபோது அங்கு கடைக்கு அருகில் ஒரு துப்பாக்கியைக் கண்டு அதைக் கைப்பற்றினேன்.

---

# பாதிக்கப்—

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அந்தந்தப்பகுதி கச்சேரியிலும், பொலிஸ் நிலையங்களிலும், பாதுகாப்புடன் இருப்பதாக, பாதிக்கப்பட்டு இங்கு வந்த ஒருவர் தெரிவித்தார்.

வவுனியாவிலும் பாதிக்கப்பட்ட தமிழர் பலர் பாதுகாப்புடன் இருப்பதாக தகவல் கிடைத்துள்ளது.

வான்களிலும், லொறிகளிலும், கிளிநொச்சிக்கு வந்தடைந்த ஆயிரக்கணக்கான பாதிக்கப்பட்டவர்களை யாழ்ப்பாணம் அனுப்ப கிளிநொச்சி எம்.பி. திரு.வி. ஆனந்தசங்கரி நடவடிக்கை எடுத்துள்ளது

நேற்றிரவு கிளிநொச்சியிலிருந்து 5 பஸ்களில் பாதிக்கப்பட்டவர்கள், யாழ். நகர் நோக்கி புறப்பட்டனர்.

கொழும்பிலிருந்து நேற்று காலை புறப்பட்ட யாழ்தேவி நேற்று பிற்பகல் 4.30 மணிக்கு யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது. நாவற்குழி புகையிரத நிலையத்திலிருந்து எட்டு பஸ்களில் இவர்களில் பலர், யாழ்ப்பாணத்திலுள்ள பாதிக்கப்பட்டோர் முகாமிற்கு கொண்டுவரப்பட்டனர். இவர்கள் உடனடியாக பஸ்களில், அவர்கள் செல்ல வேண்டிய இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தையே முன்பின் தெரியாத பல குடும்பங்களும் வந்திருந்தனர். இவர்கள், பாதிக்கப்பட்டோர் முகாமிலேயே தங்கியுள்ளனர். (க)

---

# வளாகம் திறப்பது ஒத்திவைப்பு

கொழும்பு, வெள்ளி

கொழும்பு வித்தியாலங்கார வளாகம் ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி இம்மாதம் 22-ம் திகதி ஆரம்பமாகமாட்டாது.

வளாகத் தலைவர் இதனை அறிவித்துள்ளார். வளாகம் மீண்டும் ஆரம்பமாகும் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம)

---

# யாழ். நகர்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றது.

பஸ் நிலையம் வெறிச்சோடிக் கிடந்தது. பஸ் நிலையப்பகுதியில் எந்தக் கடைகளும் திறக்கப்படவில்லை.

நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தில் பாண்விற்பனை செய்யப்பட்டது. பலர் கியூவில் நின்று வாங்கிச் சென்றனர்.

நேற்று நீதிமன்ற விசாரணைகள் எதுவும் நடைபெறவில்லை. (க)

---

# அநுரதபுரியிலிருந்து—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்களும் பெண்களும் இளைஞருமாக அநேக தொண்டர்கள் பாதிக்கப்பட்டோர்களுக்கு சமையல் செய்வதில் ஈடுபட்டிருந்தனர்.

முகாமிற்கு வெளியில் ஆயிரக்கணக்கான மக்கள் நின்று தங்கள் உறவினர்கள் பற்றி அறிந்துகொள்வதற்கு முயன்று கொண்டிருந்தனர்.

யாழ்ப்பாணம் எம்.பி. திரு. வெ. யோகேஸ்வரன், சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை, முன்னுள் மாநகரசபை உறுப்பினர் திரு. ஆ. துரைராஜசிங்கம் மற்றும் யாழ்ப்பாண வளாக மாணவர்கள் தொண்டர்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவியளித்து வருகின்றனர்.

### சடலங்களைக் கொண்டுவர முயற்சி

அநுராதபுரத்திலும் மற்றும் இடங்களிலும் பலியான தமிழர்களின் சடலங்களை இங்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகச் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் தெரிவித்தார்.

பாணந்துறை, மாத்தளைப் பகுதிகளில் பாதிக்கப்பட்டவர்களை இங்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை, அநுராதபுரம் பொறுப்பதிகாரி திரு. ரொட்றிக்கோவுடன் தொடர்புகொண்டு அநுராதபுரம் கச்சேரியில் உள்ள பாதிக்கப்பட்டோர்களைக் பாதுகாப்புடன் கொண்டுவர நடவடிக்கை எடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள மற்றும் பல நிறுவனங்கள் பாதிக்கப்பட்டோருக்கு உதவியளிக்க முன்வந்துள்ளன.

பாதிக்கப்பட்டு, முகாமை வந்தடைவோர் உடனுக்குடன் அவர்களது வீடுகளுக்கு பஸ்களில் அனுப்பிவைக்கப்பட்டனர்

அநுராதபுரத்தையே பிறப்பிடமாகக்கொண்ட 25 பேர் பாதிக்கப்பட்டோர் முகாமில் இருக்கின்றனர். இவர்கள் உடுத்த துணியுடன் மட்டுமே வந்துள்ளனர். தாங்கள் பிறந்து வளர்ந்ததெல்லாம் அநுராதபுரத்தில்தான் என்று கனகம்மா என்ற பெண் தெரிவித்தார். கலவரத்தில் சில இளம் பெண்கள் காணமற்போய்விட்டதாகவும் அவர் கூறினர் அவருடன் இரண்டு இளம் பெண்கள், ஐந்து சிறுவர்கள், ஒரு வயோதிபரும் இருந்தனர்.

### ரயிலும் வந்து சேர்ந்தனர்

அநுராதபுரத்திலிருந்து நேற்றுப் பிற்பகல் 4 மணிக்கு ஆயிரத்திற்கு மேற்பட்ட பாதிக்கப்பட்ட மக்கள் யாழ்ப்பாணம் புகையிரத நிலையம் வந்தடைந்தனர். இவர்களில் பலர் பாதிக்கப்பட்டோர் முகாமிற்குச் சென்றனர்.

---

# வாள், துப்பாக்கிகளுடன் ஐந்து இளைஞர்கள் கைது!

## கொக்குவிலில் வைத்து வானுடன் அகப்பட்டனர்

யாழ்ப்பாணம், சனி

மூன்று துப்பாக்கிகளுடனும் ஒரு வாளுடனும் வான் ஒன்றுடன்கொக்குவிலில் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட ஐந்து வாலிபர் விசாரணைக்காக காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடற்படையைச் சேர்ந்த லெப்டினன்ட் சிங்கம் தலைமையில் ரோந்துசுற்றிக்கொண்டிருந்த கடற்படை வீரர்கள் கொக்குவிலில் கே. கே. எஸ். வீதியில் வைத்து ஒரு மோட்டார் வானை மறித்துச்சோதனையிட்டபோது மேற்கூறிய ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

கடந்த புதன்கிழமைமாலை 5-45 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது. (இ)

---

# டி. ஐ. ஜி. ராஜசிங்கம்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொது இடங்களிலும் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ள தமிழ் மக்களை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வந்து உதவியளிக்கவும் சொந்த இடங்களில் சேர்ப்பிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வீடுவாசல்களையும் சொத்துக்களையும் இழந்து உடுத்த துணியுடன் வரும் மக்களுக்குச் சகல உதவிகளும் அளிப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப் பட்டு வருவதாகத் தெரிகிறது.

### கண்டியிலும் நீர்கொழும்பிலும்

அனுராதபுரத்திலிருந்து அகதிகள் யாவரும் வெளியேற்றப்பட்டு விட்டனர். பலர் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்து விட்டனர். மற்றும் சிலர் வவுனியாவிலும் கிளிநொச்சியிலும் தங்கியிருக்கின்றனர் இவர்கள் யாழ்ப்பாணம் சென்றுகொண்டிருக்கின்றனர்

கண்டியில் சுமார் ஐயாயிரம்பேர் கட்டுக்கலைப் பிள்ளையார் கோவிலில் தஞ்சம்புகுந்துள்ளதாகவும் நீர்கொழும்பிலும் கலவரம் ஏற்பட்டுள்ளதாகவும் அங்கும் ஊரடங்கு உத்தரவு அமுல் செய்யப்படலாமென்றும் கூறப்படுகிறது.

கடடுப்பொத்தை வளாகத்தைச் சேர்ந்த தமிழ் மாணவர்கள் அனைவரும் கொழும்புக்கு வந்து சேர்ந்து பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் தங்கியிருக்கின்றனர். குண்டசாலை மாணவர்கள் சிலர் அங்கிருந்து வெளியேறிவிட்டதாகவும் அவர்கள் எங்கு சென்றுர்களென்பது தெரியவில்லையென்றும் குண்டசாலை மாணவிகளை ஒரு சிங்களப் பேராசிரியர் தஞ்சமளித்து சுகமே அனுப்பிவைத்துள்ளதாகவும் தெரியவருகிறது.

---

# மருதானை ரயில் நிலையத்தில் சூட்கேஸ்கள்; நகைகள்!

## அடையாளம் காட்டிப்பெறலாம்

கொழும்பு, வெள்ளி

கடந்த 17ம் திகதி புதன்கிழமை மாலை யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் சென்ற மெயில்வண்டியில் அநுதரவாகக் கிடந்த பல பெட்டிகள், தங்க நகைகள், சூட்கேஸ்கள், கைக்கடிகாரங்கள் ஆகியன கொழும்பு - மருதானை ரயில் நிலையத்தில் பிரயாணிகளால் அடையாளம் காண்பதற்காக வைக்கப்பட்டுள்ளன.

இந்த ரயிலில் உள்ள பிரயாணிகளிடமிருந்து உடைமைகள் கொள்ளையடிக்கப்பட்டதாக பொலிஸில் புகார்செய்யப்பட்டிருந்தது.

18ம் திகதி காலை மருதானை வந்தடைந்தஇந்தரயிலிலிருந்து இப்பொருட்களை ரயில் நிலைய அதிபர் கண்டுபிடித்து ரயில் நிலையத்தில் வைத்துள்ளார். (இ)

மரணவிசாரணை

# வேறுகடை சேதமானதை நான்காணவில்லை” - சப்இன்ஸ்பெக்டர்

யாழ்ப்பாணம், சனி

யாழ் வெலிங்டன் சந்திக் கருகில் உள்ள கடையைத் தவிர கூட்டத்தினர் வேறு கடைகளைச் சேதப்படுத்து வதை நான் காணவில்லை என்று நீதவானின் கேள்வி யொன்றுக்குப் பதிலளித்த இன்ஸ்பெக்டர் மெண்டிஸ் கூறினர்.

யாழ்ப்பாணத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானவர்களின் மரண விசாரணை யாழ். நீதவான் கே. வி நவரத்தினம் முன்னிலையில் நடந்தது.

**நீதவான்:** பொலிஸ் நிலையத்திலிருந்து செல்லுமுன் பெரியகடையில் நடப்பதென்ன என்பது பற்றிதெரிந்த சென்றீரா?-ஆம்.

**நீதவான்:** பெரியகடையில என்ன நடக்கிறதென்பது பற்றி யாராவது கூறினர்களா? நிசேர்வ் பொலிஸ் கூறினர்.

**நீதவான்:** நிசேவ் பொலிஸ் பெரிய கடையில் என்றல் நாகவிகாரைக்கு நீர்ஏன் சென்றீர்?-யாழ்ப்பாண நகரில் எசுருர். இரண்டு ஜீப் பெரிய கடைப்பக்கம் சென்றதால் நான் நாகவிகாரைப் பக்கம் சென்றேன்.

**நீதவான்:** வீதியில் யார் நெருப்பு வைத்தது?-கூட்டத்தினர்.

**நீதவான்:** எதற்காக அக்கூட்டம் நிற்பதென்பது உமக்கு முதலில் தெரியாது? அங்கு போய் பார்த்தேன்.

**நீதவான்:** நீர் அங்கு போகுமுன் என்ன நடந்ததென்பது உமக்குத் தெரியாது?-தெரியாது.

**நீதவான்:** இத்தக்கடை தவிர வேறு கடைகள் சேதப்படுத்தப்படவில்லை?-ஆம்.

**நீதவான்:** அக்கடைக்கு முன்னல் மக்கள் கூடிநின்றனர்?-ஆம் மற்ற எல்லாக் கடைகளும் பூட்டப்பட்டிருந்தது.

**நீதவான்:** அக்கடைக்கு முன்னல் நின்றவர்கள், மற்றக் கடை ஊழியர்களாக இருக்குமோ என்று தெரியாது?-தெரியாது.

**நீதவான்:** நீர் அங்கு நின்றபோது யாராவது வந்து இச் சம்பவம் பற்றிப் புகார் செய்தார்களா?-இல்லை.

**நீதவான்:** நீர் செல்லு முன்னரே கடைக்குள் உள்ள பொருட்கள் யாவும் எடுக்கப் பட்டுவிட்டன?-ஆம்.

**நீதவான்:** உங்களுக்கு ஏதாவது காயம் ஏற்பட்டதா? முழங்காலுக்கு கீழ்சிறு காயம் ஏற்பட்டது.

விசாரணை இம்மாதம் 21-ம் திகதி காலைவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (க)

## வதந்திகளை நம்பாதீர்
### பாதுகாப்பு அமைச்சு அறிக்கை

கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சு நேற்றிரவு விடுத்த விசேஷ அறிக்கை வருமாறு:

'யாழ்ப்பாணத்திலோ அல்லது நாகதீபத்திலோ எந்த ஒரு பௌத்த ஆலயமும் சேதப்படுத்தப் படவில்லை. இப் பகுதிகளில் சிங்களவர்கள் குறிப்பாக சிங்கள மாணவர்கள் எவருமே தாக்கப்படவில்லை. இந்த உண்மைக்குப் புறம்பாக தீயசக்திகள் பரப்பும் எந்த வதந்திகளையும் பொதுமக்கள் நம்பவேண்டாம். சிங்கள மக்களுக்கு, குறிப்பாக மாணவர்களுக்கு எந்த விதமான தீங்கோ அல்லது இம்சையோ இப்பகுதிகளில் அளிக்கப்படவில்லை யாழ் மாவட்டத்தில் எந்த ஒரு பௌத்த ஆலயத்துக்கும் எவ்விதச் சேதமும் ஏற்படுத்தப்படவில்லை'.

## தமிழர்களைப்—

(1ம் பக்கத் தொடர்ச்சி)
களும் சுத்தமது தொதிகளுக்குத் திரும்பியதும், தமிழ் மக்களுக்குப் போதுமான பாதுகாப்பு அளிக்குமாறு நான் கேட்டுக்கொள்கின்றேன். தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு அளிக்கவும், நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டவும் சகல நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டுள்ளது'.

பிரதமர் திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தன பேரவையில் நேற்று உரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு கூறினர், அவர் மேலும் கூறியதாவது:

''யாழ். குடாநாட்டின் வெளியே நிகழ்ந்துள்ள துயரம் தோய்ந்த சம்பவங்களை அறிந்து நான் மிகவும் மனம் வருந்துகின்றேன். நடந்திருக்கும் வன்முறைச் சம்பவங்களின் பின்னணிச் சக்திகளை அறியமுன்னர், வதந்திகளைத் தடுக்க, எவ்வாறு தடுக்கப் போகிறேம் என்பதைச் சபைக்குத் தெரிவிக்க வேண்டியது எனது கடமையாகும். வடமதிய மாகாணம் முழுவதும் ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பித்துள்ளதுடன், வேறு சில பகுதிகளிலும் ஊரடங்குச் சட்டத்தை அமுல் செய்ய நடவடிக்கைகளை எடுத்துள்ளதுடன், இராணுவத்தினரைச் சேவைக்கும் அழைத்துள்ளோம். பொருள்களைக் களவெடுத்தோரை கைது செய்யுமாறு பணித்துள்ளோம்.

''மோதல்கள் ஏற்பட்டதற்குரிய காரணத்தை நானறியேன். இந்த மோதல்கள் ஏன், எவ்வாறு பரவியது? இதன் பின்னணியில் தீயசக்திகள் இருந்தனவா? என்பதையும் நானறியேன். இவற்றைக் கண்டறியும் பொருட்டு இந்தப் பேரவையின் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஆணைக்குழு நியமிக்கப்படும். இந்தக்குழு நேர்மையான முறையில் விசாரணைகளை மேற்கொள்ளும். நாட்டில் ஓரளவு அமைதி ஏற்பட்டதும் விசாரணைக் குழு தனது பணியைத் தொடங்கும்.

''நமதுநாடு ஒரே நாடு. அதே நேரத்தில், தமிழ் ஈழக் கோரிக்கையைக் கைவிடுமாறு நான் கோரவில்லை. காலம் வரும்போது இதனைப்பார்ப்போம்.

''அதேநேரத்தில், பொறுப்பு வாய்ந்த தமிழ்த் தலைவர்கள் வார்த்தைகளை அளந்து பேச வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன் உணர்ச்சி வசப்பட்டு உதிர்த்துவிடும் வார்த்தைகளினுல ஏற்படக் கூடிய அபாயங்களை உணர வேண்டும்.

''யாழ். குடாநாட்டிலிருந்து தெற்கு நோக்கி வந்த ரயில்கள் கூறிய 'கதை'கள் ஏற்படுத்திய விளைவுகளை நாம் உணர்கின்றேம்.

''தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்டுள்ள பாதிப்புகளுக்குப் பின்னணியில் உள்ள சக்திகளை நாம் நியமிக்கப்போகும் விசாரணைக் கமிஷன் விரிவாகக் கண்டறியும். யாழ்ப்பாணம் சென்று திரும்பிய பாதுகாப்புப் பிரதியமைச்சரும், கலாச்சார அமைச்சரும் சமர்ப்பித்திருக்கும் அறிக்கைகளையும் விசாரணைக் கமிஷன் பரிசீலிக்கும் யாழ்ப்பாணத்தில் அரசு அலுவலகங்களோ பஸ் போக்குவரத்துக்களோ இயங்கவில்லை யாழ்ப்பாணப் பொலிஸார் இடமாற்றங்கள் பற்றியும் ஆலோசிக்கலாம். ஆனல் யாழ்ப்பாணத்தில் அமைதி கொழும்பு மேற்கு, கிழக்குத் தொகுதிகளில் எமது அங்கத்தவர்கள் கொழும்புத் தமிழர்களைப் பாதுகாக்க எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டுவிட்டனர்'' என்று பிரதமர் தெரிவித்தார்.

# “தனிநாடு கோரிக்கையை கூட்டணிகைவிட வேண்டும்

## பேரவையுல் ஐ. தே. க. உறுப்பினர்

கொழும்பு, வெள்ளி

''தமிழர் விடுதலைக் கூட்டணி அதன் தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டு இந்நாட்டில் சகலரும் ஒற்றுமையாக, ஒரே சமுதாயமாக வாழ ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்''.

தேசிய அரசுப்பேரவை இன்று காலை 10 மணிக்கு மீண்டும் கூடியபோது அரசின் கொள்கை விளக்க உரை மீதான விவாதத்தின்மீது பேசிய வியலுவ தொகுதி உறுப்பினர் திரு. சரவீர வீரவன்னி (ஐ.தே.க) மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

விவாதத்தில் பேசிய கொழும்பு மத்திய தொகுதி இரண்டாவது உறுப்பினர் ஜனுப் எம். ஹாலிம் இஸாக் (சு க) பேசுகையில், ''தேர்தலையடுத்து நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் குறித்துப் பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் அப்போது அப்பாவி ஏழைமக்கள் இத் தாக்குதலில் எவ்வாறெல்லாம் துன்புறுத்தப்பட்டார்கள் என்ற உண்மை தெரியவரும் என்றும் சொன்னர். (ம.அ)

## ''மீண்டும் கையளிக்கவும்''

வேலணை, வெள்ளி

கதிர்காமக் கந்தனைத் தரிசிக்கச் செல்லும் யாத்திரிகர்கள் அனைவருக்கும் பலவிதங்களிலும் வசதியளித்து வந்த இராமகிருஷ்ண மண்டபத்தை மீண்டும் முன்னைய நிர்வாகத்திடம் கையளித்து உதவுமாறுகோரி பிரதமரையும் கலாச்சார அமைச்சரையும் பரிபாலன சபைச் செயலாளர் திரு.க. சிற்றம்பலம் மகஜர் மூலம் கேட்டுள்ளார். (அ)

## “தமிழ்மக்களின் உரிமைகளை பரிசீலனைசெய்ய அரசுதயார்’

### தேசியஅரசுப்பேரவையில் பிரதி அமைச்சர்கள்

(கொழும்பு)

தமிழ் மக்களின் உரிமைகளைப் பரிசீலனை செய்ய அரசாங்கம் தயாராக இருப்பதாக பாராளுமன்ற விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் திரு.எட்வின் திலகரத்ன நேற்று தேசிய அரசுப்பேரவையில் தெரிவித்தார்.

அரசாங்கக் கொள்கைத் திட்டத்தின்மீது நேற்று இரண்டாவது நாளாக விவாதம் தொடர்ந்து நடைபெற்றது. இந்த விவாதத்தில் பேசுகையில் தான் பிரதி அமைச்சர் மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

பிரதி அமைச்சர் திரு.எட்வின் திலகரத்ன தொடர்ந்து பேசுகையில், தார்மீக ஆட்சியை ஏற்படுத்துவதே அரசின் ஒரேகொள்கை என்றும், சகல பிரஜைகளையும் பாரபட்சமற்ற முறையிலேயே அரசு நோக்குகின்றது என்றும், நாடு பிரிவினைக்குள்ளாவதை அரசு அனுமதிக்காது என்றும் கூறினர்.

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்று இழுக்கப்பட்ட 627-வது தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:

1-ம் பரிசு:
17 K 0570
ரூ. 1,00,000,00

2-ம் பரிசு:
30 T 0776
ரூ. 40,000,00

3-ம் பரிசு:
13 U 0433
ரூ. 10,000,00

## இன்று கொடியேற்றம்

யாழ்ப்பாணம், சனி

நல்லூர் சந்தசாமி கோவில் வருடாந்த மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 25 தினங்கள் திருவிழாக்கள் நடைபெறும்.

இம்மாதம் 29-ந் திகதி, மஞ்சத் திருவிழாவும், அடுத்த மாதம் 12-ந் திகதி தேர்த் திருவிழாவும் 13-ந் திகதி தீர்த்தமும் நடைபெறும், சமயக் கிரிகைகளை பிரமஸ்ரீ கைலாசநாதக் குருக்கள் தலைமையில் நடைபெறும். (கெ)

## கொழும்பிலும்...

[-1ம் பக்கத் தொடர்ச்சி]
வித்தபோது: சபாநாயகர், சபை முதல்வரைப் பார்த்து ''ஹெலிகொப்டரை ஒழுங்கு செய்யமுடியாதா?'' என்று கேட்டபோது ''அது பற்றி ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாக''ச் சபை முதல்வர் திரு. பிரேமதாசா பதிலளித்தார்.

## மரண அறிவித்தல்

### அநுராதபுரம்
### ஈ. ஏ. குணரத்தினம்

தலையாளி காலஞ்சென்ற ஐயம்பிள்ளை (காட்டுக் கந்தோர்), திருமதி சோதிப்பிள்ளை ஐயம்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், நல்லூர் காலஞ்சென்ற பொ. துரையப்பாவின் மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், தயாளினி, அருணகுமார், பிரபாலினி, தேவகுமார் ஆகியோரின் அருமைத் தந்தையும், சிவசுப்பிரமணியம் B. O. A. கச்சேரி அநுராதபுரம், தர்மலிங்கம், ஆசிரியர் உரும்பிராய் இந்துக் கல்லூரி, அமிர்தலிங்கம், நில அளவைக் கந்தோர் திருகோணமலை, சூரியநாராயணன், நில அளவையாளர், சிலாபம் ஆகியோரின் அன்புச் சகோதரர் திரு ஈ. ஏ. குணரத்தினம் (நிறைவேற்றுப் பொறியியலாளர் கந்தோர், அநுராதபுரம்) அவர்கள் அகால மரணம் அடைந்துவிட்டார்கள் இவரது தர்மலிங்கம் (ஆசிரியர், மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னரின் ஈமக் கிரியைகள் யாழ்ப்பாணம், 678/2, கே. கே எஸ் வீதியிலுள்ள இல்லத்தில் நடைபெற்று, தகனத் திற்காகக் கோம்பயன் மணல் மயானத்தில் நடைபெறும். 6878

## நன்றிநவிலல்

அகால மரணமடைந்த செல்வன் ஆனந்தவேலின் மரணத்தையிட்டு எமக்கு பல வழிகளில் அளப்பரிய உதவிகள் புரிந்த பெரியோர்கள், பல ஸ்தாபனங்களின் உரிமையாளர்கள், ஊழியர்கள், நண்பர்கள் மற்றும் உறவினர்கள் மற்றும் ஈமக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேம் தனிப்பட்ட முறையில் நன்றி தெரிவிக்க முடியாமைக்கு வருந்துகின்றேம். இப்படிக்கு, S R சண்முகராசா (உரிமையாளர் உமா ஸ்ரோஸ்) குடும்பத்தினர், 187/8 கில்னர்லேன், வண்ணார்பண்ணை. 6877

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20-ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka